

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி பேரூராட்சியில், பேரூராட்சிகள் துறை சார்பில், ரூ.2.11 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்ட பேரூராட்சி பேருந்து நிலைய வணிக வளாகம் மற்றும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அலங்கார வளைவினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் ஜி.அசோகன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் சிவகாசி மாநகரச் செயலாளர் உதயசூரியன், திருச்சுழி ஒன்றியச் செயலாளர் பொன்னுத்தம்பி மற்றும் காரியாபட்டி நகரச் செயலாளர் செந்தில் ஆகியோர் கலந்து கொண்டனர்.



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கோயமுத்தூர் மாவட்டம், சூலூர் பள்ளப்பாளையம் பகுதியில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் PRICOL நிறுவனத்தின் நிதி உதவியுடன் "நம்ம ஸ்கூல் நம்ம ஊரு" பள்ளித் திட்டத்தின் கீழ் ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய வகுப்பறை கட்டடங்களைத் திறந்து வைத்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி.ப.ராஜ்குமார், சட்டமன்ற உறுப்பினர் கந்தசாமி, பிரிக்கால் நிறுவனர் விஜய் மோகன், பிரிக்கால் நிறுவனத் தலைவர் வனிதா மோகன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலமுரளி, கூடுதல் ஆட்சியர் ஸ்வேதா சுமன், பள்ளப்பாளையம் பேரூர் தலைவர் செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கருத்து மோதல் களமாக இருக்கும்

# அரசியல் அரங்கம் கொலைக்களமாக மாறுவது ஜனநாயகத்துக்கு எதிரான செயல்!

## "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, அக். 15 -

கருத்து மோதல் களமாக இருக்கும் அரசியல் அரங்கு கொலைக்களமாக மாறுவது ஜனநாயகத்துக்கு எதிரான செயல் என "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தினகரன்

அக்டோபர் 14, 2024 திங்கட்கிழமை

அரசியல் கொலைகள்

மகாராஷ்டிரா மாநிலத்தில் இன்னும் சில மாதங்களில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ளது. இந்தியாவிலேயே கள்ள கூட்டணி அரசியலுக்கு எடுத்துக்காட்டாக திகழும் மகாராஷ்டிரா மாநிலத்தில் இப்போது சிவசேனா (ஏக்நாத் ஷிண்டே), பாஜ- தேசியவாத காங்கிரஸ்(அஜித் பவார்) ஆகிய கட்சிகளின் அவியல் ஆட்சி நடக்கிறது. அங்கு எதிர்க்கட்சி எதுவென்று கேட்டால், அதுவும் சிவசேனா, தேசியவாத காங்கிரசின் இன்னொரு அணியாகவே இருக்கும். ஆட்சிகளையும், கட்சிகளையும் உடைத்து தான்தோன்றித்தனமாக செயல்படும் பாஜவின் பச்சோந்தி முகத்தை வெளிப்படுத்துவதில் மகாராஷ்டிரா அரசியலுக்கு பெரும் பங்குண்டு. அரசியல் ஒருபுறம் இருக்க, இப்போது அங்கு ஆளும் தேசியவாத காங்கிரசை சேர்ந்த மாஜி அமைச்சர் பாபா சித்திக் கொடூரமாக துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சட்டசபை தேர்தல் நெருங்கும் நிலையில், இக்கொலை அரசியல் கொலையா அல்லது ஆதாய கொலையா மற்றும் முன்விரோதம் காரணமா என பல்வேறு கேள்விகளை எழுப்பி வருகிறது.

அது வருமாறு:-

மகாராஷ்டிரா மாநிலத்தில் இன்னும் சில மாதங்களில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ளது. இந்தியாவிலேயே கள்ள கூட்டணி அரசியலுக்கு எடுத்துக்காட்டாக திகழும் மகாராஷ்டிரா மாநிலத்தில் இப்போது சிவசேனா (ஏக்நாத் ஷிண்டே), பாஜ தேசியவாத காங்கிரஸ்(அஜித் பவார்) ஆகிய கட்சிகளின் அவியல் ஆட்சி நடக்கிறது. அங்கு எதிர்க்கட்சி எதுவென்று கேட்டால், அதுவும் சிவசேனா, தேசியவாத காங்கிரசின் இன்னொரு அணியாகவே இருக்கும். ஆட்சிகளையும், கட்சிகளையும் உடைத்து தான்தோன்றித்தனமாக செயல்படும் பாஜவின் பச்சோந்தி முகத்தை வெளிப்படுத்துவதில் மகாராஷ்டிரா அரசியலுக்கு பெரும் பங்குண்டு.

அரசியல் ஒருபுறம் இருக்க, இப்போது அங்கு ஆளும் தேசியவாத காங்கிரசை சேர்ந்த மாஜி அமைச்சர் பாபா சித்திக் கொடூரமாக துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சட்டசபை தேர்தல் நெருங்கும் நிலையில், இக்கொலை அரசியல் கொலையா அல்லது ஆதாய கொலையா மற்றும் முன்விரோதம் காரணமா என பல்வேறு கேள்விகளை எழுப்பி வருகிறது.

மும்பையின் அரசியலும், தாதாக்களின் வளர்ச்சியும் இரண்டற கலந்தது. அங்கு ஒவ்வொரு தாதாக்களின் வளர்ச்சிக்கு பின்னாலும், அரசியல் பின்னணி அதிகமிருக்கும். ஹாஜி மஸ்தான், வரதராஜ முதலியார் என தொடங்கும் மும்பை டான்களின் வளர்ச்சி, தாவூத் இப்ராகிம், சோட்டா ராஜன், கரிம் லாலா என மும்பை தாதாக்களின் நிழல் உலகம், ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அரசியல் பின்னணியோடு விரிவடைந்துள்ளது. மும்பையில் துப்பாக்கி சூடு, குண்டு வெடிப்பு சர்வசாதாரணமாக நடந்தேறிய காலங்களும் உண்டு.

தற்போது சுட்டுக் கொல்லப்பட்ட மாஜி அமைச்சர் பாபா சித்திக் 3 முறை எம்.எல்.ஏ.வாக இருந்துள்ளார். இப்போது அவரது மகன் ஜீஷான் எம்எல்ஏவாக உள்ளார். தனது மகன் வீட்டிற்கு சென்றுவிட்டு வெளியே வந்தபோதுதான் அவர் கொலை செய்யப்பட்டுள்ளார். கொலை செய்யப்பட்ட விதம் மற்றும் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் ஆகியவற்றை கொண்டு போலீசார், இது கூலிப்படையினரால் நடத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கின்றனர். இக்கொலையின் பின்னணியில் மகாராஷ்டிரா மாநிலத்தின் சட்டம் - ஒழுங்கும் கேள்விக் குறியாகி வருகிறது.

ஒரு முன்னாள் அமைச்சர் மற்றும் ஒரு எம்.எல்.ஏ.வின் தந்தைக்கே உரிய பாதுகாப்பில்லாத சூழல் அங்கு காணப்படுகிறது. மேலும் முன்னாள் அமைச்சர் பாபா சித்திக்கிற்கு யு பிரிவு போலீஸ் பாதுகாப்பும் இருந்தது. அதையும் மீறி அவர் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பது சட்டம் ஒழுங்கு சீரழிவையே காட்டுகிறது. மகாராஷ்டிரா மாநிலம் ஒரு உத்தரபிரதேசமாக மாறி வருவதாக அங்கு எதிர்கட்சியினர் குற்றம் சாட்டி வருகின்றனர். பாபா சித்திக், நடிகர் சல்மான்கானின் நண்பர் என்பதால், அவரை நெருங்க முடியாத எதிரிகள், பாபா சித்திக்கை தீர்த்துக் கட்டியிருக்கலாம் என்கிற சந்தேகமும் உலா வருகிறது.

சல்மான்கானின் எதிர்தரப்பான லாரன்ஸ் பிஷ்னோய் கும்பலுக்கு இந்த சம்பவத்தில் தொடர்பு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தேர்தல் நெருங்கும் நிலையில், இக்கொலையில் அரசியல் பின்னணி இருக்குமோ என்ற கோணத்திலும் விசாரணை தொடர்கிறது. கருத்து மோதல் களமாக இருக்கும் அரசியல் அரங்கு கொலைக்களமாக மாறுவது ஜனநாயகத்துக்கு எதிரான செயல். இந்த போக்கை கூண்டோடு ஒழிப்பதை ஆட்சியாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

### மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. பகுதி, ஒன்றிய, பேரூர் அளவில்

# பொறியாளர் அணி பொறுப்புகளுக்கான விண்ணப்பங்கள் !

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கை !

மதுரை, அக். 15 -

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக ஒருங்கிணைப்புக் குழு ஆய்வுக் கூட்டத்தில் மாநில இளைஞரணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தி.மு.க. பொறியாளர் அணியின் பகுதி, ஒன்றிய, பேரூர் அளவில் பொறியாளர் அணிக்கு நிர்வாகிகளை விண்ணப்பம் மூலம் தேர்வு செய்திட தி.மு.க. பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவித்துள்ளார்.

எனவே மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. பகுதி, ஒன்றிய, பேரூர் கழக அளவில் பொறியாளர் அணி நிர்வாகிகள் பொறுப்புக்கு விருப்பமுள்ளவர்கள், இணையதளம் மூலம் விண்ணப்பம் செய்திடலாம். அதற்கென பிரத்யேக கியூ ஆர் கோடு உருவாக்கப்பட்டுள்ளது. மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்திலும் உள்ளது. பகுதி, ஒன்றிய, பேரூர் கழக பொறியாளர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு பி.இ அல்லது டிப்ளமோ படித்தவர்கள் மற்றும் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும் ஆண்கள் மற்றும் பெண்கள் விண்ணப்பிக்கலாம். எனவே சம்மந்தப்பட்ட பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் அதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சேலம் மாவட்டம் - ஓமலூர் அரசு மருத்துவமனையில் திடீர் ஆய்வு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் மேற்கொண்டார்!

சேலம், அக் 15 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, முன்னிலையில் சேலம் மாவட்டம், ஓமலூர் அரசு மருத்துவமனையில் நேற்று முன்தினம்(13.10.2024) திடீர் ஆய்வு மேற்கொண்டார்கள்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று(14.10.2024) சேலம் அரசு மோகன் குமார மங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.23.75 கோடி மதிப்பீட்டில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினர்.

மேலும், நங்கவள்ளி வட்டாரம் மற்றும் ஆத்தூர் வட்டாரம் ஆகிய பகுதிகளில் நடைபெறும் நிகழ்ச்சியின் மூலமாக ரூ.7.04 கோடி மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையங்கள், வட்டார பொது சுகாதார ஆய்வகங்கள், சித்தா மருத்துவ பிரிவு, கிராமப்புற சுகாதார பயிற்சி மையம் உள்ளிட்ட 21 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தனர்.

அந்த வகையில் சேலம் மாவட்டத்திற்கு வருகை புரிந்த மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஓமலூர் அரசு மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வின்போது புறநோயாளிகள் பிரிவு, உள்நோயாளிகள் பிரிவு, மருந்து மாத்திரைகள் வழங்குமிடம், சித்த மருத்துவமனை பிரிவு, சிடி ஸ்கேன் எடுக்கும் அறை, எலும்பு முறிவு சிகிச்சைப் ப்பிரிவு, இரத்த சுத்திகரிப்பு மையம், படுக்கை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

மேலும் இந்த ஆய்வின் போது சிகிச்சைக்கு வந்திருந்த பொதுமக்களிடம் மருத்துவமனையில் வழங்கப்பட்டு வரும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்ததுடன், தொடர்ந்து மருத்துவமனையினை சிறந்த முறையில் பராமரித்து பணியாற்றிடும் வகையில் மருத்துவர்களுக்கு தேவையான அறிவுறைகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் வழங்கினார்.

இந்த ஆய்வின்போது கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) லலித் ஆதித்ய நீலம், இணை இயக்குநர் நலப்பணிகள் மரு.பி. ராதிகா, துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மரு. யோகானந்த் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

### வடகிழக்குப் பருவமழை காரணமாக தமிழ்நாட்டில்

# பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை!

சென்னை,அக்.15-

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது.



தமிழ்நாட்டில் இன்று வடகிழக்கு பருவமழை தொடங்குகிறது. இதன் காரணமாக ஏற்கனவே சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கோவை, மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் கடந்த சில நாட்களாகவே நல்ல மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் தொடர் கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக இன்று சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், உள்ளிட்ட மாவட்டங்களில் இன்று கனமழையும் நாளை அதி கன மழை எச்சரிக்கையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது.

தமிழ்நாடு அரசின் சார்பில் மழை காரணமாக பல்வேறு மீட்பு நடவடிக்கைகளுக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. இதேபோல புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் கன மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை கொடுத்துள்ளது.

இந்தநிலையில், மிக கனமழை எச்சரிக்கை காரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய 4 மாவட்டங்களில் இன்று பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டதையடுத்து கடலூர் மாவட்டத்திற்கும் இன்று பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளித்து மாவட்ட கலெக்டர் ஆதித்யா செந்தில்குமார் உத்தரவிட்டுள்ளார்.

அதேபோல், விழுப்புரம் மாவட்டத்தில் நாளை பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அறிவித்து மாவட்ட கலெக்டர் பழனி உத்தரவிட்டுள்ளார். கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்ட நிர்வாகங்கள் நடவடிக்கையை எடுத்துள்ளது. புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### கனமழை எதிரொலி- முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க

# விமான நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்!

சென்னை,அக்.15-

விமான சேவையில் மாற்றல் இருப்பின், உடனடியாக பயணிகளுக்கு தகவல் தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளம் வழியாக தகவல்கள் வழங்கப்படும் என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. இதனால், மிக அதிகனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக விமான நிறுவனங்களுக்கு, விமான நிலைய அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

அதன்படி, ஓடுபாதை மற்றும் அதை சுற்றியுள்ள இடங்களில் மழைநீர் தேங்காதபடி தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கும்படி கூறப்பட்டுள்ளது.

விமான சேவையில் மாற்றல் இருப்பின், உடனடியாக பயணிகளுக்கு தகவல் தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.


விமான சேவை குறித்த தகவல்களை, அந்தந்த நிறுவன இணையதளத்தில் உறுதி செய்துகொள்ள பயணிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விமான சேவைகளில் பெரிய மாற்றம் இருப்பின் சமூக வலைத்தளம் வழியாக தகவல்கள் வழங்கப்படும் என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நிலக்கோட்டை ஆ. முனியாண்டி

### அக்டோபர் 15 (1992)



**தனது இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**நிலக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள தனது சொந்த ஊரான விளாம்பட்டியில் கழகக் கிளையை துவக்கி, அப்பகுதி முழுவதும் கழகத்தை வளர்த்தவர்.**

**திண்டுக்கல் மாவட்ட துணைச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.**

**1962–ல் நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்திலும், 1963–ல் மதுரையில் இந்தி திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்திலும் கலந்து கொண்டு 2 ஆண்டுகளுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்தவர்.**

**நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் 1967, 1971 ஆகிய ஆண்டுகளில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**